Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.382/2023 Date: 16.10.2025
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. செல்வகுமார் | Village | கரூர் |
| Father/ Husband Name | பாலகிருஷ்ணன் | Taluk | கரூர் |
| Age | 35/2025 | Calling | வனவர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 16.10.2025 TIME 01.30 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கரூர் வனக்கோட்டம் கடவூர்-1 வனச்சரகத்தில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் உத்தமபாளையம் வனச்சரகத்தில் வனவராக பணியில் இருந்த போது, 27.10.2022-ம் தேதி பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் நானும், வனக்காப்பாளர் திரு. பாரதிராஜா, ஆகியோர் உத்தமபாளையம் பிரிவு, உத்தமபாளையம் பீட், கண்ணூத்து சராகம் கோம்பை காப்புக்காடு பகுதியில் ரோந்து பணி செய்து கொண்டிருந்த போது வனப்பகுதியில் ஒரு நபர் அத்துமீறி உள்ளே நுழைந்து வனப்பகுதியில் இருந்த சந்தனமரத்தை வெட்டிக்கொண்டிருந்தவரை நாங்கள் சென்று தடுத்து நிறுத்தி, விசாரித்த போது அவரது பெயர் முத்துகாமன் த/பெ. காமாட்சி தேவர் கீழக்கூடலூர் என்றும் கூறினார். அவரை மீண்டும் விசாரணை செய்து, அவர் அளித்த வனப்பகுதியில் அத்துமீறி, சந்தன மரத்தை வெட்டியதாக ஒப்புக்கொண்டதை குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக நான் பதிவு செய்தேன். ஸ்தல மகஜர் அந்த இடத்திலேயே தயார் செய்தேன். மேற்படி சம்பவம் குறித்து உத்தமபாளையம் வனச்சரக அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். சம்பவ இடத்திலேயே 3 எண்ணம் வெவ்வேறான அளவுகள் கொண்ட பட்டையுடன் கூடிய மென்சந்தனமர துண்டுகள், கோடாரி-1, வெட்டுஅருவாள்-1 ஆகியவற்றை கைப்பற்றி, எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகளுடன் மேல்நடவடிக்கைக்காக வனச்சரக அலுவலரிடம் ஒப்படைத்தேன். எதிரி கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**, ஸ்தலமகஜர் **அ.சா.ஆ.2**, ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**குற்றச்சாட்டு வனைந்த பிறகு குறுக்கு விசாரணை செய்வதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் கேண்டுகொண்டதன் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.